செ.வெ.எண்: 837 நாள்: 29/09/2010

பத்திரிக்கைச் செய்தி

இன்று 29.9.2010 காலை 11.00 மணிக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்கள், அவரது அறையில், ஆதிதிராவிடர் நலத்துறையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 27 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். மேலும், இவ்வரசால் ஏற்கனவே 79 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களும், 453 பட்டதாரி ஆசிரியர்களும், 668 இடைநிலை ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தவிர 505 ஆசிரியரல்லாப் பணியிடங்களும் இவ்வரசால் நிரப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆசிரியர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள கலைஞர் அரசின் நடவடிக்கைகளால் 2006 ஆம் ஆண்டில் 70 சதவீதமாக இருந்த 10 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் இவ்வாண்டு 81 சதவீதமாகவும், 2006 ஆம் ஆண்டு 54 சதவீதமாக இருந்த 12 ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் இவ்வாண்டு 76 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறையின் ஆணையர் திரு பொ.சிவசங்கரன்,இ.ஆ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

29/9/10

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9